# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் “A+” தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024.**

**தமிழ்நாடு, இந்தியா**

அலுவலகம் : **0431-2407016,2407060**

தொலைப்பபடி : 0431-2407444

மின் அஞ்சல் : coe@bdu.ac.in

வலைத்தளம் : **www.bdu.ac.in**

முனைவர் க. துரையரசன் , எம்.எம்.ட்., எம்.பில்., பி.எச்.டி.,

**தேர்வு நெறியாளர்**


---

ந.க.எண்.தே.நெ.அ/ம.பி.II/2019 நாள்: 23.12.2019

பெறுநர்:

அனைத்துக் கல்லூரி முதல்வர்கள் (தன்னாட்சி அல்லாதவை)

பொருள்: நவம்பர் 2019 தேர்வு முடிவுகள் - வெளியிட்டது – மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பது – ஒளிநகல் விண்ணப்பிப்பது – கடைசி நாள் - தொடர்பாக.

------

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நவம்பர் 2019-க்கான தேர்வுகள் சிறந்த முறையில் நடத்தித் தந்ததற்கும் மேலும் விரைவாக தேர்வு முடிவுகளை வெளியிடும் பொருட்டு விடைத்தாள்களை மதிப்பீடு செய்திட ஆசிரியர்களை அனுப்பி உதவியதற்கும் கல்லூரி முதல்வர் அனைவருக்கும் நன்றி கலந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரதிதாசன் பல்கலைக்கழக நவம்பர் 2019-க்கான முதுநிலை தமிழ், சமஸ்கிருதம், தாவரவியல், உயிர்தொழில் நுட்பவியல், நவநாகரிக தொழில்நுட்பம் & ஆடை வடிவமைப்பு மற்றும் விலங்கியல் ஆகிய பாடங்களுக்கான தேர்வு முடிவுகள் பல்கலைக்கழக இணைய தளத்தில் 23.12.2019 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து பிற பாடங்களுக்கும் இளநிலைப் பிரிவு பாடங்களுக்கும் தேர்வு முடிவுகள் வெளியிடப்படவுள்ளன. தேர்வு முடிவுகள் வெளியிடப்படுவதை அவ்வப்பொழுது மாணவர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தேர்வு முடிவுகள் வெளியான நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் கல்லூரி முதல்வர் வழியாக உரிய கட்டணத்துடன் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரும்படி விண்ணப்பிக்க வேண்டும். **காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக பரிசீலிக்கப்படமாட்டாது.**

விடைத்தாளின் நகல் (Transparency) பெற விரும்புவோர் மட்டும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் **மறுமதிப்பீட்டிற்கு ஒளிநகல் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றும்** மீண்டும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒளிநகல் பெற்ற பின்பு மாணாக்கர்கள் அனுப்பும் மறுமதிப்பீட்டிற்கான விண்ணப்பத்தினைப் பரிந்துரைக்க வேண்டாம் என முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம்/- 23/12/19

தேர்வு நெறியாளர்